பக்கங்கள் 19 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 12 சனிக்கிழமை 27.12.2025 | அதிர்வு 150

## இலங்கை நிச்சயம் மீண்டெழும்



### என்.பி.பி. அரசு நம்பிக்கை

“பேரிடர் பாதிப்பில் இருந்து இலங்கையானது நிச்சயம் மீண்டெழும். இருந்த நிலையைவிட நிச்சயம் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# டக்ளஸுக்கு 72 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவல்!

## அவர் மீது தீவிர விசாரணைக்கு கம்பஹா நீதிமன்றம் அனுமதி

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை 72 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து தீவிர விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கம்பஹா நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கவுள்ளது. 02

## பூஸா சிறையில் 100 கைபேசிகள் கண்டுபிடிப்பு!



பூஸா உயர் பாதுகாப்பு சிறைச் சாலையில் இருந்து இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 100 இற்கும் மேற்பட்ட கையடக்கத் தொலை 02

## கண்டியில் அடிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

கண்டியில் அடிகாயங்களுடன் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கண்டி – மஹையாவ பகுதியில் வீடொன்றின் பின்னால் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 02



# யாழில் கிணற்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணத்தில் கிணறு ஒன்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

உடுவில் – மல்வம் பகுதியைச் சேர்ந்த ஞானசீலன் றெஜித்டிலாஸ் (வயது 40) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் மாலை மதுபோதையில் சென்று மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் வீட்டைவிட்டு வெளியே சென்றுள்ளார். அவர் இரவு வீட்டுக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.



பின்னர் அவரை நேற்றுக் காலை தேடிய வேளை வீட்டின் அருகேயுள்ள காணி கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் அந்தக் கிணற்று கட்டு மீது அமர்ந்திருந்து இதற்கு முன்னரும் மதுபானம் அருந்துவது வழமை என்றும், அவ்வாறு நேற்றுமுன்தினம் இரவும் போதையில் இருந்து மதுபானம் அருந்தியவேளை கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சுன்னாகம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் ஆகியோரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

## டக்ளஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2001ஆம் ஆண்டு இராணுவத்தால் டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்று, பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய, 2019ஆம் ஆண்டு கம்பஹா – வெலிவேரிய பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கைத்துப்பாக்கி, டக்ளஸ் தேவானந்தாவுக்கு, இலங்கை இராணுவத்தால் சட்டரீதியாக வழங்கப்பட்டது என ஆரம்ப கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டது.

இந்தநிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, டக்ளஸ் தேவானந்தா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது, குறித்த துப்பாக்கி டக்ளஸ் தேவானந்தாவுக்கு சட்டரீதியாக வழங்கப்பட்டமை என உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் இன்று கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை 72 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து தீவிரமாக விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர் 50 வயதுடையவராக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் 5 அடி 2 அங்குல உயரம் கொண்டவர் என்றும், சாம்பல் மற்றும் வெள்ளை நிற ஆடை அணிந்துள்ளார் என்றும் பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பூஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலக நபர்கள் உட்பட கைதிகளிடம் இருந்து இந்தத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அறைகளுக்குள் நிலத்தடியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தக் கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

கணேமுல்ல சஞ்சீவ கொலையில் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் கூறப்படும் "சமிந்து தில்ஷான்" என்பவரின் அறையில் இருந்தும் கையடக்கத் தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் "குருல்லா" என்று அழைக்கப்படும் பாதாள உலகக் குழு உறுப்பினர் அமில ஹிருஷ்லாலின் அறையில், சுமார் ஒன்றரை அடி ஆழத்தில் உள்ள ஒரு குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட நௌஃபர் மௌலவியின் அறையில் இருந்து இரண்டு கம்பித் துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சோதனையின் போது இணைய அணுகலை வழங்கும் ஒரு ரௌட்டரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஊழல் அதிகாரிகளின் உதவியுடன் சிறைச்சாலைக்குள் இந்தப் பொருட்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் சிறந்த நிலைக்கு முன்னோக்கிச் செல்வோம்."

–இவ்வாறு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"இலங்கை மீண்டெழுவதற்காகச் சர்வதேச நாடுகள் தம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றன.

இலங்கை மீது சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கை இருப்பதால்தான் இவ்வாறு உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

இதன்மூலம் இலங்கையை இருந்த இடத்தைவிட சிறந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கே நாம் முயற்சிக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தில் இருந்த கறுப்பு கரை நீக்கப்பட்டது.

இந்நிலையில் டித்வா புயலால் எமது நாட்டுப் பொருளாதாரத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் இலங்கையை மீண்டெழ வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்றார்.




# சிரேஷ்ட ஊடகவியலாளர் அஸ்வர் காலமானார்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சிரேஷ்ட ஊடகவியலாளரும் இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓய்வுபெற்ற அதிகாரியும் மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் முன்னாள் செயலாளருமான ஏ.அஸ்வர் தனது 61 ஆவது வயதில் காலமானார்.



இவரது ஜனாஸா இன்று சனிக்கிழமை மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளி மையவாடியில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் முன்னிலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மாளிகா அஸ்வர் என அறியப்பட்டிருந்த இவர் வீரகேசரி மற்றும் தினகரன் உள்ளிட்ட தேசிய பத்திரிகைகளினதும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினதும் பிராந்திய செய்தியாளராக நீண்ட காலம் பணியாற்றியமையுடன் மெட்ரோ மிரர் செய்தி இணையத் தளத்தின் ஸ்தாபக ஆசிரியர் பீட ஆலோசகராகவும் இருந்து ஊடகப் பணியாற்றியுள்ளார்.

இலக்கியத்துறையிலும் கூடிய ஈடுபாடு காட்டி வந்த இவர் மாளிகா எனும் இலக்கிய சஞ்சிகையின் ஸ்தாபக ஆசிரியராக இருந்து அதனை நீண்ட காலம் வெளியிட்டு வந்தமையுடன் பிராந்திய மற்றும் தேசிய ரீதியில் வெளியான பிரபல சஞ்சிகைகளிலும் முற்போக்கு சிந்தனையுடன் நிறைய கவிதைகள், சிறுகதைகளை எழுதி வந்துள்ளார். இவர் தனது பேனா முனையூடாக சமூகம், பிராந்தியம் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் அதீத கரிசனை காட்டியவர்.

மாளிகைக்காடு அந்நூர் மஸ்ஜிதை ஜும்ஆப் பள்ளிவாசலாக ஸ்தாபிக்கும் செயற்பாட்டில் முன்னிலை வகித்திருந்த இவர் சமூக சேவைகளிலும் கூடிய ஈடுபாடு காட்டி வந்துள்ளார்.

# கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்ற பெண் ஒருவர் யானை தாக்கி பரிதாப உயிரிழப்பு!

காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை அம்பாந்தோட்டை – பூந்தல வனப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.



மேற்படி பெண் காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்து அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை, வெலிஹட்ட சந்தி பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அவர் தனது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்றபோது காட்டு யானை தாக்கியுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சடலம் அம்பாந்தோட்டை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கொழும்பு மாநகர சபையின் பாதீடு டிச. 31ஆம் திகதி மீண்டும் சமர்ப்பிப்பு

கொழும்பு மாநகர சபையின் 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி மீண்டும் முன்வைக்கப்படவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின் கீழுள்ள கொழும்பு மாநகர சபையின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் கடந்த 22 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

இதன்போது வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய மேலதிக 3 வாக்குகளால்பாதீடுதோற்கடிக்கப்பட்டது. இது தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் ரீதியி லான பின்னடைவு என கருதப்படுகின்றது.

இந்நிலையிலேயே சில திருத்தங்களுடன் வரவு- செலவுத் திட்டம் 2ஆவது தடவையாக 31 ஆம் திகதி முன்வைக்கப்படுகின்றது.

வாக்கெடுப்பின்போது வரவு-செலவுத் திட்டம் நிறைவேறும் எனவும், எதிரணி உறுப்பினர்கள் மனசாட்சியின் பிரகாரம் வாக்களிப்பார்கள் எனவும் கொழும்பு மேயர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யார் பொறுப்பு?

வடக்கில் பல்வேறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களும் வெறும் வாய்ச்சவடால் கச்சேரிகளாக- குழாயடிச் சண்டை அரங்குகளாக - மாறி வருகின்றன. அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் கூட்டி வைத்துக் கொண்டு, வெறும் வசைபாடல் அரங்கேற்றங்களை நடத்தும் மேடைகளாகவும், கூத்துக் கும்மாளம் அடிக்கும் சமாக்களாகவும் அவை மாறி வருகின்றமையை பலரும் தங்களின் சமூக ஊடகங்கள் மூலம் விசனத்துடன் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

அரசியலில் நுழைந்து, மக்கள் வாக்குகளை பெற்று விட்ட ஒரு சில பிரகிருதிகள்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

நாட்டின் மிக உயர்ந்த சபையான நாடாளுமன்றத்தில் 'இருடா', 'செம்மறி' என்றெல்லாம் பேசிய பிரகிருதி, ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் வந்திருந்து உருத்திராட்சப் பூனை போல உபதேசம் செய்யும் அவல நிலைமை. 'குட்டி நாய் போல குரைக்க வேண்டாம்' என்று கூறியதை அவர் கண்டித்து உபதேசிக்கும் நிலைமைக்கு வடக்கின் அரசியல் சென்றிருப்பது ஆச்சரியத்துக்குரியது தான்.

வழக்கமாக நாடாளுமன்றத்தில் தனது கௌரவமான சொல்லாடல் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் எல்லாத் தரப்பினராலும் மதிக்கப்படும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் கூட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத விதத்தில் குளறு படித்தனமும் தலையீடும் எல்லை மீறியிருக்கின்றன.

இந்த நிலைமைக்கு இரண்டு தரப்புகள் மீது நேரடியாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வெளிப்படுத்த விரும்புகிறோம்.

முதல் தரப்பு - இத்தகைய கூட்டங்களை நடத்துகின்ற பொறுப்பை ஏற்கும் தலைமை பதவியில் இருப்பவர்கள். அத்துமீறிப் பேசுபவர்கள், கூட்ட ஒழுங்குகளை மீறி அடாவடித்தனம் பண்ணுபவர்களை கட்டுப்படுத்த லாயக்கற்றவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். தங்களுடைய கருத்தைகூட விரைந்தும், ஆளுமையாகவும், தெளிவாகவும், உடனடியாகவும் தெரிவிக்கும் தகுதியற்றவர்கள் - எல்லா விடயங்களையும் இழுத்து, இழுத்துப் பேசி, கூட்டத்தை சொதப்புவார்கள் - கையில் கூட்டங்களை வழி நடத்தும் தலைமைப் பதவி இருந்தால், போனவர்கள், வந்தவர்கள் எல்லாம் இத்தனை அட்டகாசம் செய்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

அடுத்தது - யாழ்ப்பாணத் தமிழர்களின் மீதான குற்றச்சாட்டு. ஒரு கூட்டத்தை - நாடாளுமன்ற அமர்வை - நடத்துவதற்கான அடிப்படைக் கண்ணியம் கூட தெரியாத பிரகிருதிகளை எல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்து வேடிக்கை பார்க்கும் யாழ்ப்பாண மக்கள்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் பிற அரசியல்வாதிகள் மீது அபவாதக் குற்றச்சாட்டுகளைப் போட்டு எள்ளி நகையாடி தங்கள் பொறுப்பை உதாசீனம் செய்து வருகிறார்கள்.

புலம்பெயர் தேசத்திலிருந்து கிடைத்த ஊக்கிவிப்போடு, உள்ளூரில் பொறுப்பின்றி நடந்து கொண்ட வாக்காளர்களுக்கு இத்தகைய தலைவர்கள்தான் வாய்ப்பார்கள்.

ஆகவே அம்பை நோவதில் அர்த்தமில்லை. எய்த யாழ்பாணத்தவர்கள்தான் இந்த இழிநிலைக்குப் பொறுப்பானவர்கள். அவர்களை விடுத்து, இதில் விமர்சனம் செய்வதற்கு எதுவும் இல்லை.






# நுகர்வோர் அதிகார சபையின் செயலமர்வு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இன்று!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் விசேஷட விழிப்புணர்வுச் செயலமர்வு இன்று கல்முனை பொலிஸ் நிலைய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வு கல்முனை பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அம்பாறை மாவட்ட செயலக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் நிர்வாக பொறுப்பதிகாரி எம். றபீக் வழிகாட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த விழிப்புணர்வுச் செயலமர்வின் பிரதான வளவாளராக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரி எம்.எச்.எம் றிபாஜ் அத்துடன் புலனாய்வு அதிகாரிகளான இஷட்.எம் ஸாஜீத் மற்றும் ஏ.பீ.எம் றிப்சாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நுகர்வோர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரச கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக விரிவுரை விளக்க காட்சி ஊடாக வழங்கப் பட்டது.

# நுவரெலியா வலய மாணவர்களின் கல்விக்குக் கரம் கொடுத்த கிழக்கு!





(நூருல் ஹுதா உமர்)

நுவரெலியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் மனிதாபிமான நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நுவரெலியா வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் வகையில் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் “கல்விக்காக கரம் கொடுப்போம்” என்ற தொனிப்பொருளில் கீழ் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை இதன் போது வழங்கினர்.

குறித்த நிவாரணப் உதவி நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் டி.எம்.பி. திசாநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவற்றில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பாடசாலை சீருடைகள் , பாதணிகள் மற்றும் தொடர்ந்து தற்காலிகமாக முகாம்களில் தங்கி உள்ள பாடசாலை மாணவர்களுக்கும் தேவையான உலர்உணவுப்பொருள்கள் அடங்கிய பல்வேறு முக்கியமான பொருள்கள் வழங்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில் மோசமான காலநிலையால் 2 ஆயிரம் மாணவர்களும், 150 ஆசிரியர்களும் நேரடியாக இடம்பெயர்ந்து உள்ளதாகவும், 35 பாடசாலைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும், 5 பாடசாலைகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது என்றும் நிகழ்வில் பங்கேற்ற நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் டி.எம்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

மேலும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள கல்முனை, கல்குடா, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மேற்கு மற்றும் மட்டக்களப்பு மத்திய கல்வி வலய காரியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் , கற்பிக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து குறித்த பொருள்களை சேகரித்து நுவரெலியா மாவட்டத்துக்கு நிவாரணமாக வழங்கியுள்ளனர்.

இதன்போது கிழக்கு மாகாணக் கல்விப் பணிமனை அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்முனை வலயக் கல்வி அலுவலக நிர்வாகத் துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்கள் இந்தப் பொருள்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்றனர்.



# சமுர்த்தி ரண்விமன காசோலையும் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வும்

(நவாஸ்)

அட்டாளைச்சேனைபிரதேசசெயலகத்தில் சமுர்த்தி பயனாளிகளின் ரண்விமன வீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா வீதம் 03 வீடுகளுக்கான காசோலையும், சுய தொழிலில் ஈடுபடும் குறைந்த வருமானமுடையவர்களுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்குதல், குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் தொழிநுட்பபயிற்சிநெறியைதொடர்வதற்கான அனுமதிக் கடிதம் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் புதன்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வானது சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் ஒருங்கிணைப்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழவுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர்ஏ.ஆதம்பாவா கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

விசேட அதிதிகளாகக் கணக்காளர் எம்.எப்.பர்ஹான்,உதவிதிட்டமிடல்பணிப்பாளர் எம்.ஜெளபர், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சின் இணைப்புச் செயலாளர் சுல்தான் சத்தார், நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவின் இணைப்புச் செயலாளர் எஸ்.எம்.ஆரிப், முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# தமிழ் மற்றும் சிங்கள இளையோர்களுக்கு மொழி, கலாசார புரிதல் மேம்பாட்டு நிகழ்வு

(மன்னார் நிருபர்)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு ஏற்பாடு செய்த தமிழ் மற்றும் சிங்கள இளையோர்களுக்கு இடையிலான மொழி மற்றும் கலாச்சார புரிதலை மேம்படுத்தும் வகையில் மொழி பாலம் நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாந்தை மேற்கில் ஆரம்பமாகியுள்ளது.

நிகழ்வில் அருட்தந்தை செல்வநாயகம் பீரிஸ் அடிகளார், மாந்தை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் டிலக்ஸன், கம்பாக மாவட்டத்தில் இருந்து வருகைதந்த மாவட்ட இணைப்பாளர் அசோக்க முனசிங்க, உள்ளடங்களாக கம்பாக மாவட்டத்தில் இருந்து அரச உத்தியோகத்தர்கள், மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பாலையடி புதுக்குள இளையோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மற்றும் கம்பஹா மாவட்ட இளைஞர் யுவதிகளிடையே மொழி பாலம் நட்புறவை மேம்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதி ஆரம்பமான நிகழ்வு தொடர்ச்சியாக எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் கம்பகாவில் இருந்து 20 இளைஞர் யுவதிகள் பங்கு பற்றியுள்ளனர்.

# மட்டு.சித்தாண்டி மாவடிவேம்பு ஐயப்பன் ஆலய பெருவிழா!





(பழுவூரான்)

மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான சித்தாண்டி மாவடிவேம்பு-2 ஸ்ரீஜயப்ப சுவாமி தேவஸ்தானத்தின் மகர ஜோதிப் பெருவிழாவின் மண்டல பூர்த்தியை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை திருவாபரணபெட்டி எடுத்து வருதல் நிகழ்வு இடம்பெற்றது.

சுவாமிக்கு ஆபரணங்களை அணியும் முகமாக ஆபரணங்களுக்கு விசேட பூசைகள் நடைபெற்று அவை பெட்டிக்குள் வைக்கப்பட்டு செங்கலடியிலிருந்து ஸ்ரீஜயப்ப சுவாமி ஆலயம்வரை தலையில் சுமந்தபடி மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதி வழியாக ஐயப்பன் பக்தர்களால் "சாமியே சரணம் ஐயப்பா" என்ற சரண கோசத்துடன் பக்தி பூர்வமாக எடுத்து வரப்பட்டது. வரும் வழியில் மாவடிவேம்பு பத்திரகாளி அம்மனை தரிசித்து ஆலயத்தை சென்றடைந்தனர்.

ஆலயத்தில் தீபாரதனை காட்டப்பட்டு விசேட பூஜை நடைபெற்றது.

பூசை நிகழ்வுகள் யாவும் குருசுவாமியும் ஐயப்ப தேவஸ்தான ஆலயத்தின் தலைவருமான சிவஸ்ரீகா.விஜயகுமார ஈசான சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது.







# சேனையூர் அனாமிகா இலக்கியக் கூடலின் ஏற்பாட்டில் சுனாமி நினைவுப் பேருரைகள்!

(பழுவூரான்)

சேனையூர் அனாமிகா கலை இலக்கியக் கூடலின் ஏற்பாட்டில் சுனாமி நினைவில் 21 ஆண்டுகள் நினைவு தினத்தை முன்னிட்டுஅனாமிகாநினைவுப்பேருரையும், ஆனந்தன் நினைவுரையும் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சீலாமுனை சின்னையா மண்டபத்தில் இடம் பெற்றன.

மட்டக்களப்பு கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி மலர்விழி சிவஞானசோதிகுரு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன்போது கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் சுந்தரலிங்கம் சந்திரகுமார் சடங்கும் சமஸ்கிரத மயமாக்கலும், சமூக விளைவுகளை முன்வைத்து அனாமிகா நினைவுப் பேருரையையும், கவிஞர் மன்சூர் ஏ.காதர் இலக்கியர் ஆனந்தன் நினைவுப் பேருரையையும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் ‘அனாமிகா - 2025’ நூலுக்கு பேராசிரியர் சு.சிவரெத்தினமும், பேராசிரியர் பாலசுகுமாரின் ‘கடல் கொண்ட காவியம்’ நூலுக்கு கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பிரியா ஜெகதீஸ்வரனும் வெளியிட்டுரை நிகழ்த்தினர்.

இந்த நினைவு நிகழ்வில், நடனக் கலைமாணி திருமதி கமலேஸ்வரி தவராஜரெட்ணத்துக்குத் தலைக்கோல் விருதும், அண்ணாவியார் மாணிக்கப்போடி பசுபதிப்பிள்ளைக்கு மூத்த கூத்தருக்கான தலைக்கோல் விருதும், குஞ்சித்தம்பி பிரபாகரனுக்கு இளைய கூத்தருக்கான தலைக்கோல் விருதும், ஓவியர் மௌனேஸ் சிவராஜாவுக்கு கண்ணுள் வினைஞர் விருதும் வழங்கப்பட்டன.
















# சுனாமி நினைவை முன்னிட்டு குருதிக்கொடை!



(பாறுக் ஷிஹான்)

சுனாமி இடம்பெற்று 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் மையோன் சமுக சேவை அமைப்பு, மையோன் குரூப், மற்றும் யுனைடெட் பவர் கவுஸ் ஆகியவற்றின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

# மன்னார் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுபெற நடமாடும் சேவையில் கலந்து கொள்ளுங்கள்!

## அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் நடைபெற இருக்கும் பாரிய நடமாடும் சேவையில் மன்னார் மாவட்டத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாகி இருக்கும் மக்கள் மன்னாரில் நடைபெறும் இந்த பாரிய நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும்படி மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மன்னார் மக்களை வேண்டியுள்ளார்.

மன்னாரில் நடைபெற இருக்கும் இந்த பாரிய நடமாடும் சேவை தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தற்போது அரசால் முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சி திட்டமான கிறீன் ஸ்ரீலங்கா என்னும் நிகழ்வாக நடமாடும் சேவை என்ற நிகழ்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் திங்கள் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இடம் பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் தேசிய நிகழ்ச்சி திட்டத்தைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் முகமாகப் பிரமாண்டமான நிகழ்வு நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தூய்மையான இலங்கை பிரஜா சக்தி தேசிய ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வும் நடத்தப்படவுள்ளது.

இத்துடன் குருதி என்பது எமது வாழ்வுக்கு முக்கியமான ஒன்றாகும். இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இரத்ததானம் முகாம் ஒன்று அமைக்கப்பட்டு இதனூடாக வடமாகாணத்தில் குருதித் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இரத்ததானமும் இடம்பெறவுள்ளது. இதில் 250 பயனாளிகள் குருதிக் கொடை நிகழ்வுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இத்துடன் மருத்துவ முகாம் ஒன்றும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் தொற்றா நோய்கள், பல், கண் போன்ற சிகிச்சைகளும் எற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் எமது பாரம்பறிய வைத்தியத்தை மிகைப்படுத்தும் நோக்குடன் ஆயுள்வேத வைத்திய சேவையையும் இந்த நிகழ்வில் எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இந்த பாரம்பரிய மருத்துவ சேவையையும் மக்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக இது அமைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை பிறப்பு, இறப்பு பெறாதவர்கள் இதனை பதிவு செய்யும் சந்தர்ப்பங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றையத் தினமே பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணபத்தவர்கள் விண்ணப்பிக்காதவர்களும் இன்றையத் தினத்தில் விண்ணப்பித்து பெறக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்தால் இவைகளையும் தீர்க்கப்படக்கூடிய நிலைமைகளும் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் தீர்வு பெறாத காணிப் பிரச்சினைகள் காணப்படுவதால் இதனைத் தீராக்கப்படும் நோக்குடன் வடக்கு மாகாண காணி ஆணையாளர்கள் வடக்கு மாகாண காணி திணைக்கள பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இன்றி பல இளைஞர் யுவதிகள் இருக்கின்றார்கள். இவர்களை தகுதியாவர்களாக்கும் வகையில் மூன்றாம் நிலை கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமும் இதில் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தொழில் நுட்பக் கல்லூரி திறந்த பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிலையங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பல நிறுவனங்கள் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றன. ஏஜே ஆடைத் தொழிற்சாலை 600 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்க தயார் நிலையில் இருக்கின்றன. கூழ் மேன் நிறுவனம் 150 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க இருக்கின்றது. இவ்வாறு இன்னும் ஓரிரு நிறுவனங்கள் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளன.

சமூக சேவைகளின் கீழ் இயங்கும் அஸ்வெஸ்ம ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்களும் இங்கு வந்து தங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

விவசாயம் கால்நடை மீன்பிடி பயிர் செய்கைகைத்தொழில்போன்றோரும்தங்கள் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

மன்னார் மாவட்டத்தில் அழிப்பு உறுதிகள் நூறு பேருக்கு வழங்கப்பட இருக்கின்றன. மீன்பிடியில் சேதத்துக்கான மீனவர்களுக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட இருக்கின்றது. விவசாயிகளுக்கும் காப்புறுதி இழப்பீடுகள் வழங்கப்படும்.

ஆகவே இந்த நடமாடும் சேவையில் மன்னார் மாவட்டத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாகி இருக்கும் மக்கள் கலந்து கொண்டு உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம்.- என்றார்.





# ஓவியப்போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றமைக்குக் கௌரவிப்பு

(றிஸ்வான் சாலிஹூ)

அரச உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன் போட்டி விருது வழங்கல் விழா- 2025, புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையில், அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் புதன்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் விழாவில், அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஓவியர் மு.த.அம்ஜாத் அகமது ஓவியப் பிரிவில், "இயற்கை மற்றும் மனித உருவங்கள்" எனும் தலைப்பில் வரையப்பட்ட தனது ஓவியத்துக்காகத் தேசிய ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்றமைக்காக விருது மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நில அளவையாளரான முகம்மது தஸ்லீம் சித்தி மறூசா ஆகியோரின் புதல்வரான இவர், தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தராக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகிறார்.

# புதிய கதிரேசன் மண்டபத்தில் பரதநாட்டிய அரங்கேற்றம்!





நிருத்திய நர்த்தனாலயா நடனபள்ளியின் இயக்குனர் நடனமானி திருமதி சாந்தி கணேசராஜாவின் மாணவியும் இரத்னகோபால் கோணேஸ்வரா மற்றும் தயாலினி கோணேஸ்வரா தம்பதியின் புதல்வியுமான செல்வி அஸ்வினி கோணேஸ்வராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5:30 மணிக்கு பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக மேலாண்மை மற்றும் நிதி பீட பீடாதிபதி பேராசிரியர் எச்.எம். நிஹால் ஹெனனாயக்கவும் கௌரவ விருந்தினராக திலகா நர்த்தனாலயத்தின் இயக்குனர் 'காலபூஷணம்' ஸ்ரீமதி யசோதரா விவேகானந்தன், சிறப்பு விருந்தினராக கொழும்பு மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி. ஈஷா ஸ்பெல்ட்விண்டே ஆகியோரும் கலந்துக் கொள்ளவுள்ளனர்.

# காரைதீவில் திருவெம்பாவை ஊர்வலம்!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவுஇந்து சமயவிருத்திச்சங்கம் வருடாவருடம் நடத்திவரும் திருப்பள்ளிஎழுச்சி திருவெம்பாவை ஊர்வலமானது நேற்று முன்தினம் முதல் தினமும் அதிகாலையில் நடைபெற்று வருகிறது.

தினமும் அதிகாலை 4 மணியளவில் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி ஆலயமொன்றில் திருவெம்பாவை பாடுதலுடன் நிறைவடையும். தொடர்ந்து திருவாசக முற்றோதலும் இடம் பெறும்.

எதிர்வரும் ஜனவரி 03 ஆம் திகதி சனிக்கிழமை திருவாதிரை தீர்த்தத்துடன் திருவெம்பாவை நிறைவடையும் என சங்கச் செயலாளர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.



-பத்மராசன் கிஷ்ணவேணி.

# சமூக ஊடகப் பயன்பாடு சிறுவர்களிடம் அதிகரித்து வருகின்றதா?

தற்போதைய காலப்பகுதியில் சிறுவர்கள் மத்தியில் சமூக ஊடகப் பயன்பாடானது அதிகரித்த வண்ணமே உள்ளது. சமூக ஊடகங்களாக facebook, Instagram, youtube, tiktok, whatsapp என்பன ஒரு சில சமூக ஊடகங்கள் ஆகும். சிறுவர்கள் இந்த சமூக ஊடக பாவனை என்ற மாய வலைக்குள் சிக்கிக் கொள்கின்றனர்.

ஒரு வகையில் சமூக ஊடகப் பயன்பாடு என்பது தகவல்களை அறிதல், தகவல் பரிமாற்றம், கல்விச் செயற்பாடு என்ற நன்மையான விடயங்களுக்குத் துணை புரிகின்றது. இன்னொரு வகையில் அதிகமான நேரங்களை சமூக ஊடகங்களில் செலவிட விரும்பும் சிறுவர்கள் அதிகரித்த ஊடக நுகர்வு காரணமாக சிறுவர்கள் அதிகமாக மன நலப் பிரச்சினைகளிற்கு ஆளாகின்றனர். தற்கொலை எண்ணங்கள் தூண்டப்படுகின்றனர். அத்துடன் சமூகத்தில் தனிமையாக இருக்க விரும்புகின்றனர். இதனால் சமூகத்தினுடைய தொடர்பாடல் நலிவுற்று தனிமைப்படுத்தப்படுகின்றனர் இவ்வாறு தனிமைப்படுத்தப்படுவதாலும் தவறான முடிவுகளை எடுப்பதற்கு அவர்களை வழி நடத்தி செல்கின்றது.

அதேபோல் நேரடி மனித இடைத் தொடர்பு குறைவடைகின்றது, சரியான தூக்கமின்மை, இணையதள வன்முறை பற்றிய போதிய விளக்கம் இன்மையால் அதிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள போதிய அறிவு சிறுவர்களிடம் காணப்படாமையால் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர் என்பன சமூக ஊடக பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் ஆகும்.

இதிலிருந்து மீண்டு வர சமூக ஊடகங்களில் அடிமையான சிறுவர்களை பெற்றோர்கள் மிகுந்த கவனத்துடன் சிறுவர்களை கண்காணித்து கொள்ளல், அவர்களது உணர்வுகளை புரிந்து கொள்ளல் வேண்டும். சிறுவர்கள் எந்த விடயத்துக்காக மன விரக்தி அடைகின்றனர் என்பதைப் பற்றி அவர்களை கண்காணித்து அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல், அதேபோல் அவர்களுக்கு சமூக ஊடகங்களை பயன்படுத்தும் நேரத்துக்கு எல்லை விதித்தல், வாசிக்கும் பழக்கவழக்கத்தை சிறுவர்களிடம் ஏற்படுத்தல், சிறுவர்களை விளையாட்டுகளில் பங்கு பெற்ற செய்தல் போன்றவை சிறுவர்களைச் சமூகப் பாவனையில் இருந்து மீட்டெடுக்க முடியும்.

இதனால் சமூக ஊடகம் என்ற மாய வலைக்குள் இருந்து வெளி வந்து சிறந்த திறமையானவர்களாக தங்களை வளர்த்துக் கொள்ள முடியும்.





# பயணத்தில் நான் கண்ட வழித்துணை!

சுற்றுலா செல்வது என்றால் யார் தான் வர மாட்டேன் என்று சொல்வார்கள். மாலை 5 மணிக்கு பஸ் புறப்படும் என்ற குறுஞ்செய்தி திரையில் விழும் போது பஸ்ஸை நெருங்கி இருந்தேன். 5 மணி என கூறி இருந்தாலும் அனைவரும் வந்துசேர் வதற்கு இரவு 7 மணி ஆகி இருந்தது. மெல் லிசை பாலுடன் இரவு வேளையில் பஸ் புறப்பட் டது.

குளிர் காற்று மேனியை தழுவிய போது ஜன்னலை இழுத்து சாத்திவிட்டு யாழ்ப்பாணத் தின் அழகை இரசித்துக் கொண்டிருந்தேன். “எல்லோரும் எழும்புங்க.. எழும்புங்க...” என்ற கூவல் காதில் கேட்டபோது, கண் விழித்து பார்த் தேன். ஆஹா என்ன ஒரு அழகான இடம். பஸ் முறிகண்டி ஆலயத்தில் தரித்து நின்றது.

முறிகண்டி ஆலயம் யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டிநோக்கிய பிரதான ஏ – 9 வீதியில் அமைந் துள்ளது. ஏ- A9 பாதை 325 கிலோமீற்றர் (202 மைல்கள்).

மத்திய மாகாண தலைநகரான கண்டியையும் வடமாகாண தலைநகரான யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பிரதான பாதையாக உள்ளது. கண்டி மாத்தளை, தம்புள்ளை, மிகுந்தலை, ரம்பாவை, மதவாச்சி, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு சென்றடைகின்ற இந்த நீண்ட தூரத்தின் வழியிலே பயணிகளுக்கு ஓய்வு கொடுக்கும் இடமாகவும் புத்துணர்ச்சியை கொடுக் கும் இடமாகவும் வீதி விபத்துக்களை தடுக்கும் முக்கிய புள்ளியாக அமைந்துள்ளது.

ஆலயத்தின் தோற்றம் பற்றி பார்க்கின்றபோது செவிவழிக் கதையே உள்ளது. ஆரம்ப காலத்தில் குடியிருப்புகள் குறைந்த இடமாகவும் காடுகளாக இருந்ததால் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. காட்டுப்பாதையில் தனியே செல்வதற்கு மக்கள் அச்சப்பட்டனர்.

ஓர் நாள் வண்டி மாடு பூட்டி பயணத்தை மேற் கொண்ட போது தற்போது முறிகண்டி ஆலயம் உள்ள இடத்தில் வண்டியின் அச்சாணி கழன்று விழுந்ததாகவும் அதன் போது அவ்விடத்தில் ஓய்வெடுத்து விட்டு விநாயகரை நினைத்து கல்லை வைத்து வழிபட்டு விட்டு வண்டியை பூட்டிச் சென்றதா கவும் செவிவழிக் கதையின் ஊடாக விநாயகர் ஆலயத்தின் தோற்றம் பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

மக்கள் தொடர்ந்து பயணிக்கின்ற போது பிள்ளை யாரை வழிபட்டே சென்றுள்ளனர். அவ்வாறு வழி படாமல் செல்கின்றபோது யானை தாக்குதலுக்கு உட்படல், வீதி விபத்து ஏற்படல் என போக்குவரத்தில் பல தடங்கல்கள் இடம் பெறுவதால் ஆலயத்துக்குச் சென்று தமது மீதி பயணத்தை நம்பிக்கையுடன் தொடர்கின்றனர்.

இந்த ஆலயத்தின் தோற்றம் சரியான கால வரையறைகள் இல்லாவிடினும் ஏ-9 பாதையில் அமைந்திருப்பதால் இதன் முக்கியத்துவம் மிக வும் சிறப்பானதாக அமைகின்றது.

தொடர்ச்சி▼

# பயணத்தில் நான் கண்ட வழித்துணை!

தொடர்ச்சி▲

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இலங்கை இராணுவத்துக்கு இடையில் நடைபெற்ற உள்நாட்டு போரின்போது பல இன்னல்களை எதிர்கொண்ட வரலாற்றை உடைய மிக முக்கியமான பாதை இது என்பது அறிந்த விடயமே.

இந்த வீதியில் பயணிகளது பிரயாணம் என்பது நீண்ட நேரமும், காட்டுப் பாதையையும், குளிர் காற்றையும் கொண்ட வெட்ட வெளிகளை கடந்து செய்யவேண்டி இப்பதால் வீதி விபத்துக்களை தவிர்ப்பது என்பது கடினமாக இருக்கின்றது.

நீண்ட பாதையில் பயணிக்கின்ற போது தூக்கம் வருவதுடன், உடல் சோர்வு, கைகால் வலி மூட்டுவலி, உடல், உள பிரச்சினைகளை பிரயாணம் செய்பவர்களும் சாரதிகளும் எதிர்கொள்கின்றனர். வழித்துணை கடவுளாக பார்க்கப்படும் விநாயகப் பெருமான் ஆலயம் இவற்றை போக்கும் முகமாக தோன்றியுள்ளார் எனலாம்.

முறிகண்டி ஆலய தோற்றம் பிரயாணிகள், சாரதிகள், உள்ளூர் வியாபாரம், கலாச்சாரம் பேணல் என பல வகையில் பயனளிப்பதாக அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா செல்லும் நீண்ட பயணத்தின் போது ஓட்டுநருக்கு தூக்கம், பசி, ஓய்வு என தேவைப்படும் போது விபத்து, முரண்பாடு, கவனச் சிதறல் ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்காக முறிகண்டி ஆலயத்துக்கு சென்று அங்கு வழிபட்டு செல்வது வழக்கமாக இருக்கின்றது. மன அமைதியும் புத்துணர்ச்சியும் கிடைப்பதாக கூறுகின்றனர்.

வழித்துணையாக அமைந்தாலும் இதனுடைய சிறப்புக்கள் தனித்தன்மை வாய்ந்தவையே. ஒவ்வொரு பாதையிலும் வழித்துணையாகப் பிள்ளையார் வைத்து வழிபடப்படும். பிள்ளையார் சிலை அமர்ந்திருப்பது போன்று வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால் முறிகண்டி ஆலயத்தில் பிள்ளையார் நின்ற நிலையில் உள்ளார் என்பது தனித்துவமான விடயமாக உள்ளது. அதிகளவான பக்தர்களை கொண்ட ஆலயமாக அமைகின்றது.

இன மத பேதங்களைத் தாண்டி அனைத்து மக்களாலும் வழிபடப்படுகின்றது. 24 மணி நேரமும் வழிபடும் ஆலயமாகத் திகழ்கின்றது. பயணிகள் தமது தேவைக்கேற்ப எந்நேரமும் பயணிக்கின்ற போது வழிபடுகின்ற வட மாகாணத்தில் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் இடமாக இது திகழ்கின்றது.

முறிகண்டி என்றால் கச்சான்தான். முறிகண்டி கச்சான் முறிகண்டி மண்ணில் விளையாதவை என்றாலும் அந்த மண்ணில் போட்டு வறுப்பதால் அதற்கு ஒரு தனிச் சுவை கிடைக்கின்றது. கச்சான் ஆரம்ப காலத்தில் உடனுக்குடன் வறுத்து கொடுப்பதை காணலாம். ஆனால் தற்போது கச்சான் வறுப்பதற்கு என இடம் உண்டு. சில கடைகளில் தேனீர் ஊற்றுவததையும் சிலர் மிஷினில் போட்டு எடுப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

இரவில் ஒளி அழகாக இருக்கும். ஆலய சூழலை சுற்றிவர மக்கள் பரபரப்பாக செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. வாரவாரம் செவ்வாய்க்கிழமையில் நிர்வாகம் கூடி தமது செயற்பாட்டை செய்கின்றனர்.

ஆலய சூழல் என்று பார்க்கின்ற போது ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை சிறிய குடிசையில் பிள்ளையார் நின்ற வண்ணம் உள்ளார். ஆலயத்தின் வளாகத்தில் தண்ணீர் தொட்டில் அமைக்கப்பட்டு அதில் எப்பொழுதும் தண்ணீர் அடித்த வண்ணம் காணப்படும். பிரயாணம் செய்பவர்கள் வருகை தந்து தமது கை, கால் முகம் கழுவிக் கொள்வதுடன் ஓய்வையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. சாப்பாட்டுக்கடை, நொறுக்குத் தீனிகடை, கச்சான் கடை என சுற்றிவர கடைகள்.

குடிதண்ணீர் வசதி, மலசலகூடவசதி, ஓய்வெடுக்கும் மண்டபம், அன்னதான மண்டபம் உண்டு. குரங்குகள் வருகையும், யானைகள் வந்து செல்வதும் என இயற்கை வனப்பு கொண்டதாக அமைகின்றது.

இரவு பகல் என 24 மணி நேரமும் இயங்கும் முறிகண்டி ஆலயத்தைத் தரிசித்து விட்டுப் பயணம் மேற்கொள்ளும் போது பயணம் வெற்றி அடையும். நாங்களும் வணங்கி விட்டு கச்சான் வாங்கி சாப்பிட்டுக்கொண்டு பயணத்தை தொடர்ந்தோம். எனது பயணத்தில் முறிகண்டி ஆலயத்துக்கு சென்றது மறக்க முடியாத பயணத்தின் ஆரம்பம்.



செ.அனுத்திரா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




பவதாரணி குலேந்திரநாதன்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# யாழில் அதிகரிக்கும் வணிக மையங்கள்!

யாழ்ப்பாணம், இலங்கையின் ஒரு முக்கிய மான நகரமாகும். இது வரலாற்று முக்கியத் துவம் மிக்கதும், பண்பாட்டு ரீதியாக செழித்ததும் ஆகும். கடந்த சில ஆண்டுகளில் யாழ். நகரம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பாதையை கடந்துள்ளது. அந்த வளர்ச்சியின் முக்கிய அங்கமாக வணிக மையங்கள் (Commercial Centers) அதிகரித்து வரு கின்றன.

முன்பு சிறிய கடைகள், பாரம்பரிய சந்தைகள் மட்டுமே இருந்த யாழ்ப்பாணம், இப்போது நவீன வசதிகளுடன் கூடிய ஷாப்பிங் மால்கள், சூப்பர் மார்க்கெட்டுகள், மின்னணு கடைகள் மற்றும் உணவகங்கள் நிறைந்த நகரமாக மாறியுள்ளது. இவை அனைத்தும் யாழ். மக்களின் வாழ்க்கை முறையை மாற்றுவதோடு மட்டுமல்லாமல், சுற்றுலா பயணிகளையும் ஈர்க்கின்றன.

இந்த வணிக மையங்கள் பொருளாதாரத்தை யும், தொழில்முனைவோர்களின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கின்றன. இதனால்தான் இன்று யாழில் வணிகம் என்பது ஒரு விரிவடையும் துறை யாகி வளர்கின்றது. இவ்வாறான வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கும், அதன் பாதிப்புகளை யும், சவால்களையும் ஆராய்ந்து கொள்ள வேண் டும்.

### வணிகமையங்களின் வளர்ச்சிக்கான காரணங்கள்

1. அமைதி நிலைமை – சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, யாழில் மீண்டும் வாழ்வாதாரம் வளரத் தொடங்கியது. இதனுடன் புதிய முதலீடுகள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள், நுகர்வோர் சேவை மையங்கள் முதலியவையும் பெருகின.

2.நுகர்வோர் தேவைகள் – மக்கள் வாழ்க்கை முறை மாறியுள்ளதுடன், நவீன வசதிகளை தேடு கின்றனர். இதனால் சூப்பர் மார்க்கெட்டுகள், ஷாப்பிங் மால்கள் மற்றும் தனியார் வணிக நிறு வனங்கள் விரைவாக உருவாகின்றன.

3. மத்திய அரசின் மற்றும் தனியார் முதலீடு கள் – சில வணிக மையங்கள் அரசு மற்றும் தனி யார் பங்குச்சேர்க்கை அடிப்படையில் உருவாக் கப்பட்டவை. இது மற்ற முதலீட்டாளர்களையும் ஊக்குவிக்கின்றது.

### வணிகமையங்கள வழங்கும் நன்மைகள்

வேலைவாய்ப்புகள் – இளைய தலைமுறைக் கேற்ப தகுதியான வேலை வாய்ப்புகள் உருவாகு கின்றன.

தொழில் வளர்ச்சி – சிறு தொழில்கள், புதிய ஸ்டார்ட்அப்கள் இங்கு தங்கள் கடைகளை ஆரம் பிக்க வாய்ப்பு பெறுகின்றன.

சுற்றுலா ஊக்குவிப்பு – யாழை பார்வையிடும் சுற்றுலா பயணிகள் இத்தகைய மையங்களில் பொருள்கள் வாங்குவதால் வர்த்தகம் அதிக ரிக்கின்றது.

### இவற்றால் ஏற்படுகின்ற சவால்கள்

பாரம்பரிய கடைகளின் பாதிப்பு – பழைய சந்தைகள் மற்றும் பாரம்பரிய கடைகள் வாடிக் கையாளர்களை இழக்கின்றன.

போக்குவரத்து நெரிசல் – நகர மையங்களில் வணிக மையங்கள் அதிகமாவதால் போக்குவரத் துச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

நிலத்தின் உயர்ந்த விலை – வணிக நிலம் மிகவும் விலை உயர்ந்ததால், சிலர் வியாபாரம் ஆரம்பிக்க முடியாமல் தவிக்கின்றனர்.

அதாவது, யாழில் வணிக மையங்கள் உருவாகு வது, நகரத்தின் வளர்ச்சிக்கு ஒரு நல்ல அடை யாளமாகும். இவை பொருளாதார முன்னேற்றத் தையும், நவீன வாழ்க்கை முறை வசதிகளையும் வழங்குகின்றன. இருப்பினும், பழைய சந்தைகள், சிறு வியாபாரிகள், பாரம்பரிய கடைகள் மற்றும் நகர திட்டமிடல் பிரச்சினைகளைச் சமநிலைப்படுத் தும் வகையில் தீர்வுகள் தேடப்பட வேண்டும். வணிக வளர்ச்சியும் சமூக சமத்துவமும் ஒருங்கி ணையும் வகையில் நகரத்துக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால், யாழின் எதிர்காலம் மேலும் உறுதியானதாகவும், நவீன மாகவும் மாறும்.



# யாழ்ப்பாணத்தின் வழுக்கி ஆறு மறக்கப்பட்ட ஒரு நீர்வழி...!

“நடந்தாய் வாழி வழுக்கியாறு” எனப் புகழ்வார் எழுத்தாளர் செங்கை ஆழியான்.

யாழ். குடாநாடு இலங்கையின் தனித்துவமான நிலவியல் அமைப்பைக் கொண்ட ஒரு பிரதேசமாக விளங்குகிறது. ஆறுகள் குறைவாகவும், நிலத்தடி நீர்மீது அதிகமான சார்புடனும் இயங்கும் இந்தப் பகுதியில் காணப்படும் சிறிய நீர்வழிகள் கூட மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்றாக வழுக்கி ஆறு குறிப்பிடத்தக்கதாகும். பெரும் ஆறுகள்போல் தொடர்ச்சியான நீரோட்டம் இல்லாவிட்டாலும், அதன் அமைவிடமும் செயற்பாடும் யாழ்ப்பாணத்தின் நீர்வள மேலாண்மையில் முக்கிய பங்காற்றுகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள வழுக்கி ஆறு அல்லது வழுக்கை ஆறு என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு பருவகால நதியாகும், இது தெல்லிப்பளையில் உருவாகி, கந்தரோடை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை வழியாகப் பாய்ந்து, அராலிக்கு அருகில் யாழ்ப்பாணக் கடலுடன் கலக்கிறது.

இது ஒரு பருவகால ஆறாகக் காணப்படுவதுடன் மழை காலங்களில் மட்டுமே நீர் ஓடும் தன்மையும் கொண்டுள்ளது. இது மலைநாடுகளில் தோன்றும் நிரந்தர ஆறுகள்போல் அல்லாமல், மழைக்காலங்களில் உருவாகும் மேற்பரப்பு நீரோட்டங்களின் சேர்க்கையால் தோன்றுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் மத்திய மற்றும் கிழக்கு நோக்கிய பகுதிகளில் காணப்படும் இயற்கை தாழ்வான நிலப்பரப்புகள், இந்த ஆற்றின் உருவாக்கத்துக்கும் நீரோட்டத்துக்கும் அடிப்படையாக அமைகின்றன.

இந்த ஆறு, அருகிலுள்ள சிறிய குளங்கள், நீர்த் தேக்கப் பகுதிகள் மற்றும் மழைநீர் தேக்கமடையும் பள்ளத்தாக்குகள் வழியாக நீரைச் சேகரித்து, விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் ஊடாக மெதுவாகப் பாய்கிறது. இறுதியில், அது யாழ்ப்பாணக் குடாநாட்டின் தாழ்நில நீர்ப் பரப்புகளுடன் கலக்கிறது. இந்த அமைவிடம், நிலத்தடி நீர்மட்டத்தை மீள்நிரப்பும் (groundwater recharge) செயல்முறையில் வழுக்கி ஆற்றிற்கு முக்கிய பங்கு அளிக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாடு பெரும்பாலும் சுண்ணாம்புக் கற்பாறைகளால் ஆன நிலவியல் அமைப்பைக் கொண்டது. இதனால், மழைநீர் விரைவாக நிலத்தடியில் ஊடுருவும் தன்மை காணப்படுகிறது. இத்தகைய சூழலில், வழுக்கி ஆறு போன்ற மேற்பரப்பு நீர்வழிகள், நீர்சேகரிப்புக்கும் நிலத்தடி நீர் பாதுகாப்புக்கும் உதவும் இயற்கை அமைப்புகளாக செயல்படுகின்றன.

மழைக்காலங்களில் இந்த ஆற்றின் நீரோட்டம் அதிகரித்து, சுற்றியுள்ள கிணறுகள் மற்றும் குளங்களின் நீர்மட்டத்தை உயர்த்துகிறது. வறட்சிக் காலங்களில் நீரோட்டம் குறைந்தாலும், அதன் ஆற்றங்கரை பகுதிகள் நீர்சார்ந்த ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்கின்றன.

வழுக்கி ஆறானது யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய விவசாயப் பகுதிகளுக்கு மிக அருகாமையில் இருப்பதால், அது கிராமிய வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகக் காணப்படுகிறது. நெல் வயல்கள், காய்கறித் தோட்டங்கள் மற்றும் வீட்டு விவசாயம் ஆகியவற்றுக்கு இந்த ஆறு ஒரு காலத்தில் முக்கிய நீராதாரமாக இருந்து வந்துள்ளது. மேலும், குடி தண்ணீருக்காகப் பயன்படுத்தப்படும் கிணறுகளின் நீர்தரத்தையும் அளவையும் பாதுகாப்பதில் வழுக்கி ஆறு மறைமுக பங்கு வகித்துள்ளது.

சமீப காலங்களில் நகரமயமாக்கல், குடியிருப்பு விரிவாக்கம் மற்றும் கட்டுப்பாடற்ற மனிதச் செயல்பாடுகள் காரணமாக, வழுக்கி ஆற்றின் இயற்கை அமைவிடம் பாதிக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் அதன் பாதை ஆக்கிரமிக்கப்பட்டும், சில இடங்களில் கழிவுநீர் கால்வாயாக மாற்றப்பட்டும் காணப்படுகிறது. இதனால் நீர்தரம் குறைவதோடு, சுற்றுச்சூழல் சமநிலையும் சீர்குலையத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வள அமைப்பில் வழுக்கி ஆறு ஒரு சிறிய நீர்வழியாக தோன்றினாலும், அதன் அமைவிடமும் செயல்பாடும் மிகுந்த முக்கியத்துவம் கொண்டவை. இந்த ஆற்றின் இயற்கை பாதையையும் சூழலையும் பாதுகாப்பது, யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் பாதுகாப்புக்கும், நிலையான வளர்ச்சிக்கும் அவசியமானதாகும். ஆகையால், வழுக்கி ஆற்றை ஒரு இயற்கை பாரம்பரியமாகக் கருதி, அறிவியல் மற்றும் நிர்வாக அடிப்படையிலான பாதுகாப்புத் திட்டங்கள் அமல்படுத்தப்படுதல் காலத்தின் கட்டாயமாகும்.



**தவநேசன் தனுசன்**
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

# தி.மு.க. செய்ததில் 5 சதவீதமாவது அ.தி.மு.க .ஆட்சியில் நடந்ததா?

## முதல்வர் ஸ்டாலின் கேள்வி

"நெஞ்சை நிமிர்த்தி காலரை உயர்த்தி தமிழகம் முன்னேறுகிறது. இதில் 5 சதவீதமாவது அ.தி.மு.க. ஆட்சியில் நடந்ததா?அவர்களால் அப்படிச் சொல்ல முடியுமா? இது என்னுடைய ஓபன் சேலஞ்ச். தைரியம் இருந்தால் அவர்கள் சொல்லட்டும்."

- இவ்வாறு தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற புதிய ஆட்சியர் அலுவலக கட்டடத் திறப்பு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் ஸ்டாலின் நேற்று பங்கேற்றார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

"கள்ளக்குறிச்சி மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் அதிக எண்ணிக்கையிலான பட்டாக்களை வழங்கி, நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு நிலம் என்ற அதிகாரத்தை வழங்கியிருக்கிறோம். அடுத்து ஏ.ஐ தொழில்நுட்பத்துடன் கூடிய லேப்டாப்களை பள்ளி மாணவர்களுக்கு வழங்கவுள்ளோம். இந்தியாவிலேயே தமிழ்நாடு தனிக்காட்டு ராஜா. இங்குள்ள தொழில் நிறுவனங்களில் தான், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் மகளிர் பணிபுரிகின்றனர்.

11.19 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளோம். மின்னணு பொருள் ஏற்றுமதி, ஆட்டோமொபைல் துறை, ஸ்டார்ட் அப் தரவரிசை ஆகியவற்றில் தமிழ்நாடு தான் 'நம்பர் 1.' இதையெல்லாம் சொல்லச் சொல்ல



எனக்கு மூச்சு வாங்குகிறது. இது எல்லாமே நிரூபிக்கப்பட்ட உண்மைகள். மத்திய அரசின் தர வரிசை பட்டியலிலும், உலக அளவிலான விருதுகளை பெறுவதிலும் கூட நம்பர் ஒன் தமிழ்நாடு தான். இதில் 5 சதவீதமாவது அதிமுக ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதா? உங்களால் சொல்ல முடியுமா? நான் வெளிப்படையாகவே சவால் விடுகிறேன்.

10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் பாழாய்ப் போன தமிழ்நாடு, திராவிட மொடல் ஆட்சியில் 4 ஆண்டுகளில் துள்ளிக் குதித்து எழுந்துள்ளது. இனி எப்போதும் ஏறுமுகம் தான். மத்திய அரசு வஞ்சகத்துடன் தமிழ்நாட்டுக்கு முதலீட்டாளர்கள் வரவேகூடாது என 'ஸ்பீடு பிரேக்' போடுவதையும் தாண்டி சாதனை படைத்து வருகிறோம். திராவிட மொடல் ஆட்சியின் சாதனைக்கு 2026 தேர்தலில் மக்கள் தீர்ப்பு அளிப்பார்கள்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் வறுமை, மத வன்முறை, வேலை வாய்ப்பின்மை இதுதான் இருக்கிறது. இதுதான் பா.ஜ.க. மொடல் அரசு. கிறிஸ்துமஸ் அன்று கூட மாற்றுத் திறனாளி கிறிஸ்தவரை தாக்கி மதவெறியை தூண்டுகிற மோசமான நிலையை பா.ஜ.க. உருவாக்கி வைத்திருக்கிறது. இந்த மொடலைத் தான் தமிழகத்தில் கொண்டு வரப் பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் ரொம்ப உஷார். திருப்பரங்குன்றம் மலையில் இருக்கிற தர்காவை முருக பக்தர்கள் வணங்குகிறார்கள். மதுரை சித்திரைத் திருவிழாவுக்கு வரும் இந்து சகோதரர்களுக்கு பள்ளிவாசல்களில் இருந்து இஸ்லாமிய சகோதரர்கள் ரோஸ் மில்க் கொடுக்கிறார்கள்.

தை முதல்நாளில் தேவாலயங்களில் பொங்கல் வைத்து படைக்கிறார்கள். நத்தார், ரம்ஜான் வந்தால், 'பிரியாணி, கேக் எங்கே?' என்று உரிமையாகக் கேட்கிறார்கள. 'எம்மதமும் சம்மதம்' என்ற தமிழக மக்களின் ஒற்றுமை, மத நல்லிணக்கம், மதவாத சக்தியான பா.ஜ.கவின் கண்களை உறுத்துகிறது. ஆனால், உண்மையான ஒற்றுமையுடன் வாழும் தமிழக மக்களிடம் எப்போதும் மத வெறியை தூண்ட முடியாது.

இந்த ஸ்டாலின் இருக்கும் வரை, திராவிட மொடல் அரசு இருக்கும் வரை பா.ஜ.கவின் மதவாத ஆட்டத்துக்கு தமிழ்நாட்டில் இடமில்லை. தமிழ்நாட்டு மக்கள் வாக்குகளால் உங்களை விரட்டியடிப்பார்கள். நீங்கள் என்ன செய்தாலும் உங்கள் பாச்சா பலிக்காது. " என்று தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு: தேர்தல் அதிகாரிக்கு பா.ஜ.க. கடிதம்

வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு தொடர்பில் தேர்தல் அதிகாரிக்கு பா.ஜ.க. மாநில செயலாளர் கடிதம் எழுதியுள்ளார்.

சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு, பா.ஜ.க. மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் அனுப்பியுள்ள கடிதத்தில்,

"வாக்காளர் படிவம்-6 என்பது புதிய வாக்காளர்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஏற்கெனவே வாக்காளராக இருந்த ஒருவர், தனது பெயர் விடுபட்டதற்காக மீண்டும் இப்படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்கினால், அது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950 பிரிவு 31-ன்படி தவறான அறிவிப்பு செய்ததாக கருதப்பட்டு, தண்டனைக்குரிய குற்றமாக மாற வாய்ப்புள்ளது.

இதுகுறித்து டிசம்பர் 20 ஆம் திகதி தேர்தல் ஆணைய பார்வையாளர் முன்னிலையில் முறையிட்டபோது, இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என உறுதியளிக்



கப்பட்டது. ஆனால் படிவம் 6 மட்டுமே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதனால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படவும், எதிர்க்கட்சிகளின் விண்ணப்பங்கள் திட்டமிட்டு தவிர்க்கப்படவும் வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

எனவே 2025 வரைவுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வாக்காளர்கள் எந்த படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும் என்பதை தேர்தல் ஆணையம் உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த குழப்பத்தால் தகுதியுள்ள வாக்காளர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# த.வெ.கவை நோக்கி நகரும் கட்சிகள்; தடுக்க முடியாமல் திணறும் பா.ஜ.க.

அ.தி.மு.கவுடன் பியூஷ் கோயல் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு, கசியவிடப்பட்ட தொகுதிப் பங்கீடு குறித்த தகவல்கள் பெரும் புயலை கிளப்பி, சில கட்சிகளை த.வெ.க. பக்கம் தடம் மாற வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

அ.தி.மு.க. உடனான பியூஷ் கோயல் டீம் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன்,

“தினகரன், ஓ.பி.எஸ்ஸை கூட்டணிக்குள் சேர்ப்பது குறித்தான பேச்சுவார்த்தைகள் எதுவும் இன்று நடக்கவில்லை” என்று தெரிவித்தார்.

அதேசமயம் தினகரன், பிரேமலதா, ஓ.பி.எஸ். ஆகியோருக்கு முறையே ஆறு, ஆறு, மூன்று என தொகுதிகள் ஒதுக்கப்படலாம் எனப் பேசப்பட்டதாக வெளியான செய்திகள் அந்த மூவரையுமே கடும் கோபத்திற்கு உள்ளாக்கி விட்டது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தினகரன்,

“அ.ம.மு.கவுக்கு ஆறு இடங்கள் தேசிய ஜனநாயக கூட்டணியில் ஒதுக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்திகள் வதந்தி. யாரை தோற்கடிக்கும் நோக்கில் அமமுக உருவாக்கப்பட்டதோ, அந்தப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம்.” என்று சொன்னார்.

அதேபோல், ஓ.பி.எஸ்.ஸின் ‘அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் கழக’ மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய பலரும், “பழனிசாமி தலைமையை ஏற்கவே முடியாது. 3 தொகுதிகளுக்காக அந்த அணிக்குச் செல்லக்கூடாது” என்று வற்புறுத்திய நிலையில், ஓ.பி.எஸ்ஸும் அதை வழிமொழிந்தார். அ.தி.மு.க. அணி இல்லாத நிலையில் இவர்கள் இருவருக்கும் இருக்கும் அடுத்த தெரிவு, தி.மு.க. அணி அல்லது த.வெ.க. அணி தான்.

ஆரம்பம் முதலே த.வெ.கவுக்கு ஆதரவாகப் பேசி வரும் தினகரன், “த.வெ.க. தலைமையில் தாங்கள் கூட்டணி அமைத்தால், அதிமுக மூன்றாவது இடத்துக்கு தள்ளப்படும்” என்றும் சொன்னார்.

ஆனாலும் அ.ம.மு.க. விஷயத்தில் எந்தப் பிடிமானமும் கொடுக்கவில்லை த.வெ.க. அதனால் மையமாகவே பேசிவந்த தினகரனுடன் தற்போது த.வெ.க. தரப்பிலிருந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிகிறது. இவரோடு சேர்ந்து ஓ.பி.எஸ்ஸும் பனையூர் பக்கம் போவதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே இருக்கின்றன. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடப்பது உண்மை என செங்கோட்டையனும் அதை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

தினகரன், ஓ.பி.எஸ்ஸைத் தொடர்ந்து பிரேமலதாவும் ஆறு சீட் விஷயத்தில் தகிப்புடன் இருக்கிறார். “எந்தக் கட்சி இப்படியான செய்தியை பரப்பியதோ அந்தக் கட்சிக்கே இது அழிவு காலத்தை உண்டாக்கும்” என்று சாபம் விட்டிருக்கிறார்.

இப்போதைக்கு அந்தக் கட்சி தி.மு.க, அ.தி.மு.க, த.வெ.க என மூன்று கட்சிக்கும் வாசலைத் திறந்து வைத்திருந்தாலும் கடைசி நேரத்தில், கவுரமான இடங்களைப் பெறுவதற்காக த.வெ.க. பக்கம் செல்வதற்கான வாய்ப்புகளே அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

ஆனாலும் தி.மு.கவை வீழ்த்த மெகா கூட்டணி அமைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டே வரும் பா.ஜ.க, இவர்களை எல்லாம் அவர்கள் போக்கிலேயே போக விட்டு விடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



# ட்ரம்பை சந்திக்கிறார் உக்ரைன் ஜனாதிபதி

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலன்ஸ்கி நாளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்கவுள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான போரை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

சமாதானத்திற்காக அமெரிக்க ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட '20 அம்ச அமைதித் திட்டம்' மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்கள் தொடர்பான முன்மொழிவுகள் குறித்து இந்த சந்திப்பின் போது விரிவாக விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் புத்தாண்டிற்கு முன்பாக பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என தான் நம்புவதாக உக்ரைன் ஜனாதிபதி தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

இந்த நிலையில், ரஷ்ய ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவியாளர், அமெரிக்க அதிகாரிகளுடன் தொலைபேசி வாயிலாக மேலதிக பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

# 20 அமெரிக்க நிறுவனங்களுக்கு தடை விதித்துள்ள சீனா அரசு



அமெரிக்காவின் 20 நிறுவனங்களுக்கு சீனா தடை விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா, தாய்வானுக்கு சுமார் 11 பில்லியன் டொலர் மதிப்பிலான பாரிய ஆயுத விற்பனைத் தொகுப்பை அறிவித்ததற்கு பதிலடியாக, சீனா இந்தத் தடையை விதித்துள்ளது.

அமெரிக்காவின் தற்போதைய ட்ரம்ப் நிர்வாகம், தாய்வானுக்கு ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கியது.

தாய்வானை தனது நாட்டின் ஒரு பகுதியாகக் கருதும் சீனா, அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைத் தனது இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட சவாலாகப் பார்க்கிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், சீன வெளியுறவு அமைச்சு நேற்று அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டது

போயிங், நோர்த்ரோப் க்ரம்மன் உள்ளிட்ட 20 முக்கிய பாதுகாப்பு நிறுவனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய 10 உயர்மட்ட அதிகாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் அல்லது தனிநபர்களுக்குச் சீனாவில் ஏதேனும் சொத்துக்கள் இருந்தால் அவை முடக்கப்படும்.

சீன நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இந்த அமெரிக்க நிறுவனங்களுடன் எந்தவிதமான வர்த்தகத் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள முடியாது.

இதேவேளை தடை விதிக்கப்பட்ட 10 அதிகாரிகளும் சீனா, ஹொங்கொங் மற்றும் மக்காவ் ஆகிய நாடுகளுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைகள் பெரும்பாலும் அடையாள ரீதியானவை என்று சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஏனெனில், இதில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான அமெரிக்கப் பாதுகாப்பு நிறுவனங்களுக்குச் சீனாவில் நேரடி வணிகத் தொடர்புகள் மிகக் குறைவாகவே உள்ளன.




# சிரியா பள்ளிவாசலில் குண்டுவெடிப்பு: 8 பேர் உயிரிழப்பு, 18 பேர் படுகாயம்

சிரியாவின் ஹோம்ஸ் நகரில் பெரும்பான்மையாக அலவைட் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியில் உள்ள இமாம் அலி பின் அபி தாலிப் பள்ளிவாசலில் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகையின்போது நடந்த குண்டு வெடிப்பில் 8 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்.

ஹோம்ஸ் நகரத்தின் இமாம் அலி பின் அபி தாலிப் பள்ளிவாசலில் வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. இந்த பள்ளிவாசல், சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹோம்ஸில் உள்ள வாடி அல்-தஹாப் சுற்றுப்புறத்தில், அலவைட் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதியில் அமைந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த குண்டுவெடிப்பு நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் தொழுகையின் போது நடந்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்கவில்லை என்றும், பள்ளிவாசலில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்ததாகவும், பள்ளிவாசலை சுற்றி ஒரு பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளதாக சிரியாவின் உள்துறை அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிரியாவின் நீண்டகாலத் தலைவரான அலவைட் பிரிவைச் சேர்ந்த பஷர் அல்-அசாத் கடந்த ஆண்டு கிளர்ச்சியாளர்களின் தாக்குதலால் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, பெரும்பான்மை சன்னி முஸ்லிம் பிரிவினரைச் சேர்ந்த உறுப்பினர்கள் தலைமையிலான அரசாங்கம் அமைந்த பின்னர், சிரியாவில் சிறுபான்மையினரை குறிவைத்து பல தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகிறது.

இந்த மாத தொடக்கத்தில், மத்திய சிரியாவில் நடந்த தாக்குதலில் இரண்டு அமெரிக்க வீரர்களும், ஒரு மொழிபெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர்

ஒரு வருடத்திற்கு முன்பு அசாத் அரசு அகற்றப்பட்ட பிறகு, வழிபாட்டுத் தலத்தில் நிகழும் இரண்டாவது குண்டுவெடிப்பு இதுவாகும். கடந்த ஜூன் மாதம் டமாஸ்கஸில் உள்ள ஒரு தேவாலயத்தில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர்.







கனடா முரசு

சனிக்கிழமை | 27/12/2025

## மொன்றியாலில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி இருவர் பலி

கனடாவின் மொன்றியாலின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லனோடியேர் பிராந்தியத்தில், ஒரு ஏரியில் 'டிராக்டர்' மூழ்கிய விபத்தையடுத்து, ஒரு ஆண் 02▶




# கனடாவில் நத்தார் தினத்தில் ஏற்பட்ட பாரிய தீ விபத்து

## 20 பேர் இடம்பெயர்வு

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள கோக்ரேன் நகரின் நான்காம் அவென்யூவில் அமைந்துள்ள ஆன்டர்சன் ஹவுஸ் குடியிருப்பு கட்டடம், நத்தார் தினத்தில ஏற்பட்ட தீ விபத்தில் முழுமையாக அழிந்தது. இதில் வசித்து வந்த 20 பேர் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் உடைகள் கிடைப்பதை உறுதி செய்ய, உள்ளூர் தன்னார்வலர்கள் உடனடியாக உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

தீ விபத்திற்கான காரணம் 02▶







# வைத்தியசாலை அலட்சியத்தால் உயிரிழந்த இந்திய வம்சாவளி நபர்

கனடா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக 8 மணி நேரம் காத்திருந்த இந்திய வம்சாவளி நபர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

44 வயதான பிரஷாந்த் ஸ்ரீகுமார், கடுமையான மார்பு வலியால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை செய்யப்படாமல் 8 மணி நேரம் வலியுடன் போராடி உயிரிழந்துள்ளார்.

டிசம்பர் 22 அன்று, வேலை செய்யும் இடத்தில் மார்பு வலி ஏற்பட்டதால், பிரஷாந்த் தனது நண்பரின் உதவியுடன் Grey Nuns Community Hospital-க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வைத்தியசாலையின் அவசர அறையில் பதிவு செய்யப்பட்ட அவர், waiting area-வில் அமர வைக்கப்பட்டார்.

வைத்தியர்கள் ஈ.சி.ஜி. சோதனை செய்தபோதும், “பெரிதாக எதுவும் இல்லை” எனக் கூறி, அவரை தொடர்ந்து காத்திருக்க வைத்துள்ளனர்.

வலி அதிகரிக்க, Tylenol மாத்திரை மட்டும் வழங்கப்பட்டது. ஆனால் அவரது இரத்த அழுத்தம் தொடர்ந்து உயர்ந்தது.

8 மணி நேரம் கழித்து சிகிச்சை அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டபோது, பிரஷாந்த் தந்தையிடம் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென மார்பைப் பிடித்து விழுந்தார்.

உடனடியாக சி.பி.ஆர். முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், எந்த பலனும் இல்லை.

பிரஷாந்த், தனது மனைவி மற்றும் 3, 10, 14 வயதுடைய மூன்று குழந்தைகளை விட்டுப் புரிந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு சொந்தமான Covenant Health நிறுவனம், “நோயாளி பாதுகாப்பே எங்களின் முதன்மை” எனக் கூறி, இந்த சம்பவம் Chief Medical Examiner அலுவலகத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த சம்பவம், கனடாவின் அவச ரகால சிகிச்சை முறை குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் கண்டறியப்படவில்லை என்றும், இது ஒன்ராரியோ தீயணைப்பு விசா ரணை அலுவலகம் மற்றும் ஒன்ரா ரியோ மாகாண பொலிஸ் ஆகிய வற்றால் விசாரிக்கப்பட்டு வருவதாக வும் கோக்ரேன் தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

“விசாரணை ஆரம்ப கட்டத்தில் இருப்பதால், தீ எவ்வாறு ஏற்பட்டது அல்லது சந்தேகத்திற்குரியதா என்பதைக் குறித்து தற்போது கருத்து தெரிவிக்க முடியாது,” என தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு சென்றபோது, கட்டிடத்தின் பல பகுதிகளில் தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்ததாகவும், மூன்று தீயணைப்பு வாகனங்களுடன் 20 தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த தீயை முழுமையாக அணைக்க சுமார் 8 மணி நேரம் எடுத்ததாகவும், காலை 9 மணியளவில் தீ விபத்து குறித்து தகவல் கிடைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“கட்டடத்திற்கு வெறும் மூன்று அடி தூரத்தில் இருந்த நகர மன்றக் கட்டடத்தை பாதுகாக்க தீயணைப்புத் துறை தீவிரமாக செயல்பட்டது.

அகழ்வெந்திரத்தின் உதவியுடன் நகர மன்றத்தை காப்பாற்ற முடிந்தது. அதில் மிகக் குறைந்த சேதமே ஏற்பட்டுள்ளது,” என தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது. முழுமையாக அழிந்த ஆன்டர்சன் ஹவுஸ் கட்டடத்தின் இழப்பு மதிப்பு குறித்து இன்னும் கணக்கிடப்பட வில்லை.

## மொன்றியாலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஒரு குழந்தையின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கியூபெக் மாகாண பொலிஸாரால், இருவரின் உடல்களும் மீட்கப்பட்டன.

ஏரியைச் சுற்றியுள்ள பாதையில் பனியை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அந்த இருவரும் 'டிராக்டரில்' பயணித்துக் கொண்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயத்தில் 'டிராக்டர்' திடீரென ஏரிக்குள் மூழ்கியுள்ளது. இந்த விபத்து தொடர்பான தேடுதல் நடவடிக்கை புதன்கிழமை இரவு செயின்ட்-செனோன் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

விபத்தை நேரில் கண்ட குடும்ப உறுப்பினர் ஒருவர் புதன்கிழமை மாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, தேடுதல் மற்றும்




மீட்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

தேடுதலில் தீயணைப்பு வீரர்களும், நீருக்குள் செயல்படும் டைவிங் குழுவும் ஈடுபட்டிருந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக மரண விசாரணை அதிகாரி விசாரணையை ஆரம்பித்துள்ளனர் எனவும் இதில் எந்தவித குற்றச்செயல் சம்பந்தப்பட்ட ஆதாரங்களும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# கடும் பனிப்பொழிவு தொடர்பில் டொரோண்டோவில் எச்சரிக்கை

கனடாவின் டொரோண்டோ பெரும் பாக பகுதியில் கடுயைமான பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி முழுவதும் பயணிப்பவர்கள், கூடுதல் பொறுமையுடன் பயணிக்குமாறும், பனிப்பொழிவு காரணமாக சிரமங்களை எதிர்கொள்ள தயாராக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டொரோண்டோ மற்றும் GTA பகுதிகள் உட்பட தெற்கு ஒன்ராரியோவின் பெரும்பகுதிக்கு, கனடாவின் சுற்றுச் சூழல் திணைக்களம் பனிப்பொழிவு தொடர்பான மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

டொரோண்டோ நகரில் சுமார் 8 முதல் 12 செ.மீ. அளவிலான "கணிசமான பனிப்பொழிவு" ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"இன்று காலை தாமதமாக பனிப்பொழிவு தொடங்கி, மாலை நேரத்தில் மேற்கு முதல் கிழக்கு நோக்கி முடிவடையும்.

பிற்பகலில் சில பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு ஏற்படலாம் இதனால் பார்வைத் திறன் குறைய வாய்ப்புள்ளது," என எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயணம் சவாலானதாக இருக்கும் என்றும் எச்சரிக்கை குறிப்பிட்டுள்ளது.

காலை 8.30 மணியளவில் டொரோண்டோ நகர மையப் பகுதியில் லேசான பனி பெய்யத் தொடங்கியிருந்தாலும், நாளின் பின்னேரத்தில் அது தீவிரமடையும் என வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது டொரோண்டோ, யார்க் பிராந்தியம், டர்ஹாம் பிராந்தியம், பாரி, பீட்டர்பரோ, பெல்வில் உள்ளிட்ட இடங்களுக்கும், தென்மேற்கு மற்றும் வட ஒன்ராரியோவின் பரந்த பகுதிகளுக்கும் இந்த மஞ்சள் எச்சரிக்கை அமுலில் உள்ளது.











